செ. கு. எண்: 084 நாள்: 12.08.2019

## உடல் உறுப்பு தானத்தை ஒரு மக்கள் இயக்கமாகவே மாற்றுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வேண்டுகோள் – 12.8.2019

**மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால்** இந்தியாவிலேயே முதன் முதலாக உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை ஆணையம் (TRANSTAN) என்ற முன்னோடி அமைப்பு 12.12.2014 அன்று உருவாக்கப்பட்டு, தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான தலைநகரமாக மாறி வருகிறது என்பது அனைவரும் அறிந்ததே. மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள் தனது வானொலி உரையில், உடல் உறுப்பு தானத்தில் தமிழ்நாடு தலைசிறந்து முன்னோடி மாநிலமாக விளங்குகிறது என பாராட்டியுள்ளார்.

மூளைச்சாவு அடைந்தவரின் உடல் உறுப்புகளை தானம் அளிப்பதன் மூலம் 7 நபர்களுக்கு வாழ்வளிக்க முடியும். தமிழ்நாட்டில் இதுவரை 1297 கொடையாளர்களிடமிருந்து 7568 உறுப்புகள் தானமாக பெறப்பட்டுள்ளன. **உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையில் தொடர்ந்து நான்காவது முறையாக தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.**

மாண்புமிகு அம்மாவின் அரசு, உடல் உறுப்பு தானம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திட, பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தி வருகின்றது. மேலும், பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் மூலம் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, உடல் உறுப்பு தானத்தை ஒரு மக்கள் இயக்கமாகவே தமிழ்நாடு மாற்றி வருகிறது.

ஏழை எளிய மக்களுக்கு கட்டணமில்லாமல் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. அதிகபட்சமாக 25 இலட்சம் ரூபாய் வரை முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே முதன்முறையாக சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் கடந்தாண்டு கை மாற்று அறுவை சிகிச்சை வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் 13–ம் நாள் உடல் உறுப்பு தான தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. இந்நாளில் **“உடல் உறுப்பு தானம் செய்வோம்! உயிர்களை காப்போம்!”** என்ற உறுதிமொழியை நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஏற்றுக்கொள்வதுடன், உடல் உறுப்பு தானத்தில் தொடர்ந்து தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக விளங்கிட செய்திடுவோம்.

K.பழனிசாமி
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9